# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# S.C. No. 323/2012

**26.09.2024**

## P.W.5- ராதாகிருஷ்ணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போஸ் கடையில் 10 வருடங்கள் பணிபுரிந்தேன். மேற்படி போஸ் கடை உசிலம்பட்டி மெயின் ரோட்டில் கிழக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி கடைக்கு கீழ்தளத்திலிருந்து ஏழு படிகள் மேலேறி கடையின் வராண்டாவிற்கு செல்ல முடியும் என்றால் சரிதான். மேற்படி வராண்டா கடைக்கு வெளியே தென்வடலாக செல்கிறது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலீசார் எங்கு எப்போது விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினமே கடைக்கு வெளியே ரோட்டில் வைத்து விசாரித்தார்கள். அப்போது மாலை 5.30 மணி இருக்கும். போலீசார் விசாரிக்கும்போது எதிரி அங்கு நின்று கொண்டிருந்தாரா என்றால் அங்கு இல்லை. எதிரி எந்த திசையில், எப்படி ஓடினார் என்று நான் பார்க்கவில்லை. நான் கடைக்குள் உட்கார்ந்திருந்த போது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். அவ்வாறு வெளியே வந்து பார்த்தபோது கீழே உள்ள படிக்கட்டில் எல்லோரும் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரியல்ல, எதிரி மேலே வந்தார். நான் வெளியே வந்து பார்த்தபோது வராண்டாவில் போஸ் காயம்பட்டு கிடந்தார் என்றால் சரிதான். பின்னர் போலீசார் வந்து காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் நானும், அங்கிருந்த ஆட்களும் சேர்ந்து தான் அனுப்பி வைத்தோம். போலீசார் அனுப்பி வைக்கவில்லை. போஸ்க்கு இரண்டு மகள் மற்றும் ஒரு மகன் என்றால் சரிதான். மூத்த மகளைத்தான் எதிரி திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். போஸ் மகன் பிரவின் தான் கடையை பார்த்து கொள்வார் என்றால் சரிதான், ஆனால் அன்றைய தினம் அவர் கடைக்கு வரவில்லை. அவ்வாறு வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், போஸ்

மட்டும் தான் கடையில் இருந்தோம். எதிரியின் இருசக்கர வாகனம் நான் பார்க்கும் போது இல்லை. அருவாளை சம்பவத்திற்கு பின்பு நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசாரும் அருவாளை காட்டி என்னிடம் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரிக்கு கைகளில் காயம் ஏற்பட்டதை பார்த்தேனா என்றால் எதிரிக்கு காயம் ஏற்படவில்லை. சம்பவ நேரத்தில் எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போஸ்யை நான் மருத்துவமனையில் சொல்லி சேர்த்தேனா என்றால் அவ்வாறு சேர்க்கவில்லை, அழைத்து சென்றேன். போஸ் மருத்துவமனைக்கு எவ்வாறு சென்றார் என்றால் ஆம்புலன்ஸ்சில் சென்றார். கடைக்குள் பொருட்கள் சேதாரமாகி ரத்தகறைகள் பட்டிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்னது போன்று, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் எதையும் பார்க்கவில்லை என்றும், அப்போது போஸ் கடையில் நான் வேலை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கில் சாட்சியமாக என்னை பின்னிட்டு சாட்சியமாக போட்டு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.09.26 16:05:01 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.